தேதி : 17.05.2012 நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மகாத்மா காந்தி தேசிய வேலை உத்தரவாதத் திட்டம், வேளாண் நடவடிக்கைகளை பாதிக்காத விதத்தில் செயல்படுத்தப்படும் என்று மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.ஜெய்ராம் ரமேஷ் உறுதி அளித்துள்ளார்.
- குடியரசுத் தலைவர் தேர்தலில் முன்னாள் மக்களவைத் தலைவர் திரு.பி.ஏ.சங்மா–வை அஇஅதிமுக ஆதரிக்கும் என்று தமிழக முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா அறிவித்துள்ளார்.
- புதுவையில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை ஓராண்டு காலமாக நிறைவேற்றாத என்ஆர் காங்கிரஸ் அரசு பதவியில் இருந்து வெளியேற வேண்டுமென மாநில அஇஅதிமுக செயலர் திரு.அன்பழகன் கூறியுள்ளார்.
- புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மார்க்சிய கம்யூனிஸ்கட்சி, தேமுதிக–விற்கு ஆதரவு அறிவித்துள்ளது.

---

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைஉறுதித் திட்டம் வேளாண் நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தாமல் செயல்படுத்தப்படும் என்று ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.ஜெய்ராம் ரமேஷ் உறுதி அளித்துள்ளார். மக்களவையில் இன்று கேள்விநேரத்தின் போது இதைத் தெரிவித்த அவர், இத்திட்டம் தேவையின் அடிப்படையிலான திட்டம் என்றும், இதற்கான ஒதுக்கீடு நடப்பு நிதி ஆண்டில் குறைக்கப்பட்டிருப்பதாகவும் கூறினர். வேலை இல்லாதோரின் எண்ணிக்கை ஐந்தரை கோடியில் இருந்து 5 கோடியாக குறைந்திருப்பதை அடுத்து, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும், இத்திட்டத்தின் மூலம் கிராமப்புறங்களில் இருந்து நகர்புறங்களுக்கு இடம் பெயர்வோரின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும் அவர் கூறினர். ஆண்டுதோறும் இத்திட்டம் ஆய்வு செய்யப்படுவதாகவும், அதன் அறிக்கை நவம்பர் மாதம் மக்களவையில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். இத்திட்டத்தின் கீழ் கேரளம் மற்றும் தமிழகத்தில் அதிகமான மகளிர் பயன்பெற்று வருவதாகவும் திரு.ஜெய்ராம் ரமேஷ் கூறினர். இத்திட்டத்தின் கீழ், போலி அடையாள அட்டைகளின் புழக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், தனி நபர் சோதனை நடத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினர்.

><><><

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்கான சட்டத்தை திருத்தும் நடைமுறைகளில் அரசு தற்போது ஈடுபட்டுள்ளதாக மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரப் பங்கேற்புத்துறை இணை அமைச்சர் திரு.முகுல் வாஸ்னிக் தெரிவித்துள்ளார். இன்று மாநிலங்களவையில் துணைக்கேள்விகளுக்கு பதில் அளித்த அவர், சட்டத்திருத்தம் பற்றிய வரைவு அனைத்து மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இன்னும் 5 – 6 மாநிலங்களின் கருத்துக்களுக்கு அமைச்சகம் காத்திருப்பதாகவும் கூறினர். கண்ணியத்துடன் வாழும் உரிமை அனைத்துக் குடிமக்களுக்கும் இருப்பதாகவும், தாழ்த்தப்பட்ட வகுப்பனர் மற்றும் பழங்குடியினரின் உயிருக்கு அரசு அதிகபட்ச முக்கியத்துவம் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். வன்கொடுமைக்கு ஆளாகும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கான நிவாரண மற்றும் மறுவாழ்வு உதவிகள் 150 சதவிகிதமாக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்கு சட்ட உதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

><><><

குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலில் முன்னாள் மக்களவைத் தலைவர் திரு.பி.ஏ.சங்மா–வை அஇஅதிமுக ஆதரிக்கும் என்று அக்கட்சியின் பொதுச்செயலரும், தமிழக முதலமைச்சருமான செல்வி.ஜெயலலிதா அறிவித்துள்ளார். சென்னையில் இன்று இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், ஒடிஷா முதலமைச்சர் திரு.நவீன்பட்நாயக்குடன் ஆலோசனை கலந்து இம்முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறினர். திரு.பி.ஏ.சங்மா பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர் என்றும், பழங்குடி இனத்தைச் சேர்ந்த எவரும் இதுவரை குடியரசுத் தலைவராக இருந்தது இல்லை என்பதைக் கருத்தில் கொண்டு தாங்கள் இவ்வாறு முடிவு செய்திருப்பதாக அவர் தெரிவித்தார். திரு.சங்மா குடியரசுத் தலைவர் பதவிக்கு முற்றிலும் தகுதியானவர் என்றும் செல்வி.ஜெயலலிதா கூறினர். திரு.சங்மா அண்மையில் சென்னையில் செல்வி.ஜெயலலிதா–வை சந்தித்துப் பேசியதும் குறிப்பிடத்தக்கது.

><><

தமிழகத்தில் ஆற்று மணல் சட்டவிரோதமாக அள்ளப்படுவதை அரசு சகித்துக் கொள்ளாது என்றும், மணல் கொள்ளையில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்றும் முதலமைச்சர் செல்வி.ஜெயலலிதா கூறியுள்ளார். சென்னையில் இன்று இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், ஆற்று மணலை சட்டவிரோத சக்திகள் சுரண்டுவதைத் தடுக்கவே அஇஅதிமுக அரசின் முந்தைய பதவிக் காலத்தில் நீதிமன்ற உத்தரவின் பேரில் மணல் அள்ளும் பணிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதாகவும், அடுத்து வந்த திமுக அரசுதான் இந்த விதிமுறைகளை காற்றில் பறக்கவிட்டு விட்டதாகவும் கூறினர். தமிழகத்தில் கடந்த ஒரு ஆண்டில் மணல் கொள்ளை தொடர்பாக 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், 14 கோடி ருபாய் அபராரதம் விதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். மணல் விற்பனை மூலம் கடந்த ஓராண்டில் அரசுக்கு 197 கோடி ருபாய் வருவாய் கிடைத்திருப்பதாக செல்வி.ஜெயலலிதா மேலும் தெரிவித்தார்.

><><

தமிழகத்தில் திமுக–வைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் திரு.வீரபாண்டி–க்குச் சொந்தமான 16 இடங்களில் மாநில லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை போலீசார் இன்று அதிரடி சோதனை நடத்தியுள்ளனர். அவர் தமது பெயரிலும், தமது குடும்பத்தினர் பெயரிலும் அசையும் சொத்துக்கள் மற்றும் அசையா சொத்துக்களை குவித்திருப்பதாக குறிப்பிட்ட தகவல் பெறப்பட்டதன் பேரில், விசாரணையின் ஒரு பகுதியாக சென்னை, சேலம் மற்றும் தர்மபுரியில் இந்த அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டதாக லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத்துறை செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. திரு.வீரபாண்டி ஆறுமுகம் ஏற்கனவே நில அபகரிப்பு வழக்கு ஒன்றில் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதும் நினைவிருக்கலாம்.

><><

புதுவையில் ஓராண்டு காலமாக பதவியில் உள்ள என்ஆர் காங்கிரஸ் அரசு தேர்தலின் போதும், சட்டமன்றத்திலும் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியிருப்பதால் பதவியில் இருந்து வெளியேற வேண்டும் என அஇஅதிமுக மாநிலச் செயலர் திரு.அன்பழகன் கோரியுள்ளார். இன்று புதுவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஓராண்டுகால என்ஆர் காங்கிரஸ் ஆட்சியில் தொழில், வேளாண்மை, கல்வி அல்லது சமூகத் துறைகளில் எந்த ஒரு முன்னேற்றமும் ஏற்படாமல், புதுவை மாநிலம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறினர். புதுவையில் சட்டம் – ஒழுங்கு அரசின் கட்டுப்பாட்டில் இல்லை என்றும், அனைத்துத் துறைகளிலும் நிர்வாக சீர்கேடுகள் மலிந்துவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினர். புதுவை பல்கலைக்கழகத்தில் கல்விக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டிய திரு.அன்பழகன், இதைவிட பல வசதிகளை மாணவர்களுக்கு வழங்கும் பல பல்கலைக்கழகங்களில் கட்டணம் குறைவாகவே இருப்பதாகக் கூறினர். பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகளைக் கண்காணிக்க அரசு தனிக் குழு ஒன்றை அமைக்கவேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தினர்.

><><

ஜுன் 12–ஆம் தேதி நடைபெற உள்ள புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நாளை தொடங்க உள்ளது. வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வரும் 25–ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும், தாக்கலான மனுக்களின் பரிசீலனை 26–ஆம் தேதி நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை வாபஸ் பெற 28–ஆம் தேதிவரை அவகாசம் அளிக்கப்படும். 28–ஆம் தேதி அன்று மாலை இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியாகும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

><><><

ஜுன் – 12 புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், தேமுதிக வேட்பாளரை மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கும் என்று சிபிஎம் தமிழ்நாடு பிரிவு செயலர் திரு.ஜி.ராமகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். சென்னையில் இன்று இதுதொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர், அஇஅதிமுக அரசின் ஓராண்டு கால் ஆட்சியில் விலைவாசி உயர்வு, மின்கட்டண உயர்வு, பேருந்துக் கட்டண உயர்வு, பால்விலை உயர்வு போன்ற பிரச்சனைகளால் மட்டுமின்றி, சட்டம் – ஒழுங்கு சீர்குலைவினாலும் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறினர். ஆளும் அஇஅதிமுக–வை அரசியல் ரீதியில் எதிர்கொள்ளும் முயற்சியாகவே சிபிஎம் மற்ற எதிர்கட்சிகளைப் போல தேர்தலைப் புறக்கணிக்காமல், பிரதான எதிர்கட்சியை ஆதரிக்க முடிவு செய்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலை, திமுக, மதிமுக, பாமக, விடுதலை சிறுத்தைகள், சிபிஐ உள்ளிட்ட எதிர்கட்சிகள் புறக்கணித்துள்ள நிலையில், அஇஅதிமுக–விற்கும், தேமுதிக–விற்கும் இடையே நேரடிப்போட்டி உருவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

><><><

வெள்ளி கிரகம் சூரிய வட்டத்தின் ஊடாக நகரும் அபூர்வ வானியல் நிகழ்வு வரும் ஜுன் 6–ஆம் தேதி ஏற்பட உள்ளது. இதன் முக்கியத்துவம் குறித்தும், இந்த அபூர்வ நிகழ்வை காண்பதற்கான ஏற்பாடுகள் குறித்தும் எடுத்துக் கூறுகிறார் புதுவை அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையைச் சேர்ந்த

><><><

புதுவையில் இருந்து கடலூர் சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்து ஒன்றும், கடலூரில் இருந்து வந்துகொண்டிருந்த மணல் லாரி ஒன்றும், கங்கணாங்குப்பம் அருகே இன்று நேருக்கு நேர் மோதிக்கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் ஒரு பெண் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். 3 பேர் கவலைக்கு இடமாக புதுவை ஜிப்மர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். காயம் அடைந்த மேலும் 15 பேர் கடலூர் அரசு மருத்துவமனையில் சேரக்கப்பட்டுள்ளதாக எமது கடலூர் நிருபர் தெரிவிக்கிறார்.

><><><

கார் கண்ணாடிகளில் கறுப்பு பிலிம் ஒட்டப்படுவதை தடைசெய்வதான உச்ச நீதிமன்ற உத்தரவின் படி, சென்னை நகரில் அனைத்து கார்கள் உள்ளிட்ட 4 சக்கர வாகனங்களின் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டுள்ள கறுப்பு பிலிம்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என மாநகர போக்குவரத்து காவல்துறை அறிவுறுத்தி உள்ளது. அவ்வாறு அகற்ற தவறுவோர் மீது அபராதம் விதிக்கப்படும் என்று சென்னையில் இன்று வெளியான போக்குவரத்து காவல்துறையின் செய்திக்குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. கார் கண்ணாடிகளில் கறுப்பு பிலிம் ஒட்டப்படுவதைத் தடுப்பதற்கான உச்ச நீதிமன்ற உத்தரவு கடந்த 4–ஆம் தேதி முதல் அமலுக்கு வந்திருப்பதும், கார் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்ட அளவு ஒளிபுகும் தன்மையுடன் கூடிய கண்ணாடிகளை கார்களில் பயன்படுத்த வேண்டுமென உத்தரவிடப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

><><><

மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அடுத்த வாரம் புதுடில்லியில் ஏர் இண்டியா நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துத் தொழிற்சங்க அமைப்புகளின் கூட்டம் ஒன்றைக் கூட்டியுள்ளது. விமானிகளின் பதவி உயர்வு உள்ளிட்ட மனிதவள பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.அஜித்சிங் இன்று புதுடில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். ஏர் இண்டியா நிறுவனமும், இண்டியன் ஏர்லைன்ஸ் நிறுவனமும் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னர், இவ்விரு நிறுவனங்களின் மனிதவளத்தை ஒருங்கிணைப்பது தொடர்பாக தர்மாதிகாரி கமிட்டி அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்படலாம் எனத் தெரிகிறது. இதற்கிடையே, ஏர் இண்டியா நிறுவனத்தின் 200–க்கும் மேற்பட்ட விமானிகள் இன்று 10–ஆவது நாளாக தொடர்ந்து வேலைநிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். வேலைநிறுத்தம் காரணமாக, பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால், ஆயிரக் கணக்கிலான பயணிகள் அவதிக்கு ஆளாயினர்.